அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

எல்லாம் செயல் கூடும்

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

# தீப நெறி

DEEPA NERI

தீபம் 10 நெறி 9 சுத்த சன்மார்க்கத் தமிழ் திங்கள் இதழ் விலை ₹1 நவம்பர் 2020 // Vol - 10 Issue-9 Tamil Monthly Price ₹1 November 2020

பட்டினியில்லா...
நோயில்லா...
குற்றமில்லா...

வளமிக்க
வையகத்தை
வார்த்தெடுப்போம்!




எல்லா உலகமும் என் உலகமாயின...
எல்லா உயிர்களும் என் உயிராயின...

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!
வள்ளல் மலரடி வாழ்க!! வாழ்க!!!




## வாயார வாழ்த்துகிறோம்


தீபம் அறக்கட்டளையின் அன்னதானப்பணிகளுக்கு மாதந்தோறும் ரூ.40,000/- தொடர் நன்கொடை வழங்கும் பூர்விகா மொபைல்ஸ் மேலாளர் **திரு. V. கௌதம்** அவர்களை தீபம் மனம், மொழி, மெய்யால் வாழ்த்துகிறது.





## வாழ்த்துக்கள்

தினசரி அனைத்து நாட்களிலும் தருமச்சாலையில் அன்னதானத் திரு தொண்டு செய்யும் **திரு. நூர் முகம்மது** அவர்களை தீபம் பாராட்டி வாழ்த்துகிறது

## “ தீபநெறி ” ஆசிரியர் குழு




**திரு. கே.என். உமாபதி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கே.கே. நகர், சென்னை.
கைப்பேசி : 95518 49757



**திரு. செ. கதிர்வேல்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
ஈரோடு.
கைப்பேசி : 98659 39896



**திரு. பொதிகைப்பிரியன்**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கள்ளக்குறிச்சி
கைப்பேசி : 97897 88198



**திரு. அர. இலட்சுமணசாமி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
இராணிப்பேட்டை.
கைப்பேசி : 80564 38488



**திரு. பா. தண்டபாணி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
சென்னை
கைப்பேசி : 73585 28467



**திரு. மு. பாலகிருஷ்ணன்**
தணிக்கை & வெளியீட்டாளர்
தீபநெறி மாத இதழ்.
கைப்பேசி : 94440 73635

## தனிப்பெருங்கருணை

..... நமது ஆண்டவர் கட்டளையிட்டது யாதெனில் நமக்கு முன் சாதனம் கருணையானதினாலே ஆண்டவர் முதற்சாதனமாக.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

என்னும் திருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக் கொண்டார். தயவு, கருணை, அருள் என்பவை ஒருபொருளையே குறிக்கும். ஆதலால் பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம் அது ஒப்பற்ற பெருந்தயவுடைய பேரறிவே யாம். வாச்சியார்த்தம். இவ்வண்ணம் சாதனம் முதிர்ந்தால் முடிவான இன்பானுபவம் பெறத் தடையில்லை.... இதுகாணும் தெய்வத்தின் உண்மையைத் தெரிய வொட்டாது. அசுத்தமாயா காரிகளாகிய சித்தர்கள் மறைத்து விட்டார்கள் சுத்தமாயா காரியாகிய தெரிந்த பெரியோரும் இல்லை சன்மார்க்கமும் இல்லை சன்மார்க்கம் இருந்தால் கேட்டறியாத கேள்விகளை நாம் கேட்டிருப்போம்... கேட்டறியாத கேள்விகளைக் கேட்கும்படி ஆண்டவர் செய்தது இத் தருணமே. இக் காலமே சன்மார்க்க காலம் இதற்குச் சாட்சியாக இப்போது தான் சன்மார்க்கக் கொடிகட்டிக் கொண்டது.

(பக்கம் 474 - திரு அருட்பா உரை நடைப்பகுதி)

அருட்பெருஞ்ஜோதி என்பதற்குப் பொருள் எழுதியவர்கள் பரல். பெருமானாரும் அருட்பெருஞ்ஜோதி அகவலில் வகை வகையாக மெய்ப்பொருள், தனிப்பொருள், பரம், பதம், குணம், சிவம், பதி, குரு, தாய், தந்தை, துணை, நட்பு, உறவு, சத்து, சித்து, இன்பு, அமுது, மணி, மந்திரம், மருந்து, பொன், நிதி, மலை, கடல், கனி, சுவை, மலர், பாட்டு, அறிவு, அன்பு, விளக்கு, மதி, மழை, சுடர், சீர், என விளக்கியிருக்கிறார். (அகவல் வரி 130-142)

"...பவனத்தின் அண்டப்பரப்பின் எங்கெங்கும் அவனுக்கு அவனாம் அருட்பெருஞ்ஜோதி திவளுற்ற அண்டத் திரளின் எங்கெங்கும் அவளுக்கு அவளாம் அருட்பெருஞ்ஜோதி மதன் உற்ற அண்டவரைப்பின் எங்கெங்கும் அதனுக்கு அதுவாம் அருட்பெருஞ்ஜோதி எப்பாலுமாய் வெளி எல்லாம் கடந்து மேல் அப்பாலுமாகிய அருட்பெருஞ்ஜோதி வல்லதாய் எல்லாம் ஆகி எல்லாமும் அல்லதாய் விளக்கும் அருட்பெருஞ்ஜோதி எப்பொருள் மெய்ப்பொருள் என்பர் மெய்கண்டோர் அப்பொருளாகிய அருட்பெருஞ்ஜோதி..."

அண்டத்தின் மேற்பரப்பிலுள்ள அவன், அவள், அது எல்லாம், வெளிகடந்து மேல் அப்பாலும் வல்லதாய் எல்லாம் ஆகி எல்லாமும் அல்லதாய் விளங்கும் மெய்ப்பொருள் மெய்கண் (டே) டார் என்ப (வ) ர் காட்டிய அப்பொருளாகிய அருட்பொருஞ்ஜோதி எனவே பெருமானார் எழுதிய பாடல்கள், உரைநடை, அகவல், பேருபதேசம் போன்றவைகள் எல்லாமே சிவமயம் (அன்புமயம்) திருச்சிற்றம்பலம் (சிற்றம்பலத்தே திருநடஜோதி) என்னும் புருவமத்தி) என்று தொடங்குவதாலும் நிறைவுறுவதாலும் வானாளடைவர் என்ற பாடலில் காணப்படும் போதம் பெறுவர் என்பது மெய்கண்டார் அருளிய சிவஞான போதமும் சுத்த சன்மார்க்க வார்த்தைகளன்றி வேறில்லை என்பதாகக் காணமுடிகிறது.

அருட்பெருஞ்ஜோதி என்பது மனிதர்களாகிய நாம் தெரிந்து கொள்ள வேண்டிய பரம்பொருளின் தன்மை. இந்தக் கட்டுரையின் முதல் பத்தியில் காணப்படும். "ஒப்பற்ற பெருந்தயவு" என்பது தான் தனிப்பெருங்கருணை அது ஆண்டவன் நமக்குச் செய்யும் நன்மை, அண்டமும் பிண்டமும் அந்தச் செயலின் முலமே நடைபெறுகிறது. உதாரணமாக

**நலந்தர உடலுயிர் நல்லறிவு எனக்கே
மலர்ந்திடக் கருணை மழைபொழி மழையே (1526)**

**அண்டத்தில்**

கருணை – என்பது தண்ணீரை நமக்குத்தந்தது பெருங்கருணை – என்பது கடலில் மேகம் உருவானாலும் கடலில் மட்டுமே மழை பொழியாமல் நிலத்திற்கு மேலாகவும் அதை வருவித்து மழை பொழிவித்தல்.

தனிப்பெருங்கருணை – என்பது உப்பும், அசுத்தங்களும் கலந்துள்ள கடல்நீரை அப்படியே மழையாகப் பொழியவைக்காமல் நன்னீராய்ப் பொழிவிக்கிறானே அது தான் தனிப்பெருங்கருணை எனத் தெளிவதே.

**பிண்டத்தில்**

கருணை – என்பதை உடம்பின் அம்சமாகத்தந்து உய்வு பெற்றிடுக என்றது, பெருங்கருணை – என்பது உடம்பைக்காத்தல், பிணிபோக்குதல், இரத்தம், சுக்கிலம், பித்தவாத சிலேத்துமம் சமானம், கழிவகற்றல், மரபணு மாறாமல் காத்தல், புலன்களின் பணி தொய்வுறாமல் தொடர்தல், உண்ட உணவை ஜீரணம் செய்தல், உறக்கம், விழிப்பு, நினைப்பு, மறப்பு, உறவு, பகை, அறிவு, ஆற்றல் தந்து வாழச்செய்தல். தனிப்பெருங்கருணை – என்பது காரிய காரண உடலை மேம்படுத்தி முத்தேகசித்தி பெற்று நற்கதியடைய கரணப் பெருந்திறலை நம்முள்ளேயே காட்டி இறவாமைக்கு வழி செய்த செயலேயாகும்.

இப்படி பல உதாரணங்களை விளக்கங்களை நாம் விளங்கிக்கொள்ள வேண்டியே அந்த அருட்பெருஞ்ஜோதி ஆண்டவன் வள்ளலாரின் வழியாக ஆன்ம நேயம் கொண்டு ஆன்மலாபம் பெறச் சொன்னானே அதுவே அவனது தனிப்பெருங்கருணை!

**அடிக்குறிப்பு**

சைவத்தில் அகச்சந்தானக் குரவர் நால்வருள் "சத்தியஞான தர்ஷனி" என்பவரும் ஒருவர். அவர் மாணாக்கரில் ஒருவரான பரஞ்ஜோதிரிஷி என்பவர், தனது மாணாக்கருக்கு சத்தியஞான தர்ஷனி என்ற பெயரின் தமிழாக்கமான "மெய்ப்பொருள் கண்டார்" எனப் பெயரிட்டார். அவர்தான் சிவஞான போதம் தந்த மெய்கண்டார் "வாழையடி வாழையென வந்த திருக்கூட்டமரபில் யான் ஒருவன் அன்றோ" என்பதே சான்று (சத்தியஞான (சபை) தரிசனம் என்பதற்கும் இது காரணமாயமைந்திருக்கலாம்)

"எப்பொருள் மெய்ப்பொருள் என்பர் மெய்கண்டோர் அப்பொருள் ஆகிய அருட்பெருஞ்ஜோதி" என்ற அகவல் வரிகள் 141–142 காண்க.



**K.N. உமாபதி**
K.K. நகர், சென்னை
95518 49757

**தீபநெறி மாதஇதழ்**

தங்களின் நலம் விரும்பிகளுக்கு அனுப்ப / பெற / நிறுத்த முகவரி மாற்றம் தெரிவிக்க **9444073635** என்ற எண்ணுக்கு **தங்களின் பெயர், கைபேசி எண் & முகவரியை** SMS / WhatsApp செய்யவும்.

**தூய்மையால் எனது துரிசெலாம் நீக்கிநல்**
**வாய்மையால் கருணை மழைபொழி மழையே (1528)**

## உண்மை உரைக்கின்றேன்!

உண்மை உரைத்தாலும் இவ்வுலகத்தார் தெரிந்து கொள்வதற்கு ஆர்வம் இல்லாதவர்களாகவே இருக்கின்றார்கள் என்கிறார் வள்ளலார். ஏன் என்றால் புனைந்து உரைத்த பொய்யான கற்பனைக் கதைகளின் மூடநம்பிக்கைகள் அவர்களின் ஆன்மாவில் நிறைந்து அழுத்தமாகப் பதிவாகி உள்ளன.

வள்ளலார் வாழ்க்கை வரலாற்றை உற்று நோக்கினால் சில உண்மைகள் தெரியவரும்.

வள்ளலார் சிறு குழந்தைப் பருவத்தில் தாய் தந்தையாரோடு சிதம்பர தரிசனத்திற்கு சென்ற போது சிதம்பர ரகசியத்தை வெட்ட வெளியாக இறைவன் காட்டியுள்ளார்.

அடுத்து அப்பா இறந்துபோன பிறகு குழந்தைகளை அழைத்துக் கொண்டு தாய் சின்னம்மை அவர்கள் தன் பிறந்த ஊரான சின்னக் காவனம் சென்றார்கள்.

அங்கு குடும்பம் நடத்தப் போதிய வருமானம் போதவில்லை என்று குடும்பத்தோடு சென்னைக்கு வந்துவிடுகிறார்கள்.

வள்ளலாரின் சிறுவயது ஆறு வயது முதல் பன்னிரண்டு வயதிற்கு மேல் சமய தெய்வங்களைப் பற்றிப் பாடியும் எழுதியும் வருகின்றார். 35 வயது வரை பல பக்தி சார்ந்த சமயம் சார்ந்த மதம் சார்ந்த தெய்வங்களையும் பாடி பக்தியின் உச்சிக்கு சென்றுவிடுகின்றார்.

வள்ளலார் பாடிய பக்திப் பாடல்கள் மற்றும் சமயத் தெய்வங்களான எல்லா தெய்வங்களையும் எவருமே பாட முடியாத அளவிற்கு ஆழ்ந்த கருத்தாழமுள்ள சமய மதக் கருத்துக்களை வெளியிடுகிறார். போற்றிப் புகழ்கின்றார்.

சமய மதங்கள் யாவும் பொய்! அடுத்து சமய மத வழிபாடுகள் கடவுள்கள் எல்லாமே பொய் என்று வெளிப்படையாகப் போட்டு உடைக்கின்றார். ஆனாலும் உண்மையான கடவுள் யார் என்பதைச் சொல்லவில்லை. எதன் மூலம் போட்டு உடைக்கின்றார் என்றால்,

ஜீவகாருண்யம் ஏழைகளின் பசியைப் போக்குவதே ஜீவகாருண்யம் என்றும், ஏழைகளின் பசிக்கொடுமைப் பற்றியும், பசிப்பிணியைப் பற்றியும், அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்து, இதுவரையில் எவரும் சொல்லாத வண்ணம் சொல்கிறார்.

“ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு” என்றும், அருள் பெறுவதற்கு ஜீவகாருண்யத்தை விட்டால் வேறு வழியே கிடையாது என்றும் ஜீவகாருண்யமே ஞான வழி என்றும் அருள் பெறும் வழி என்றும் அழுத்தமாகச் சொல்லுகின்றார்.

ஆன்மா! ஆன்மாவைப் பற்றியும், ஆன்ம லாபத்தைப் பற்றியும், இயற்கை உண்மை வடிவனரான இறைவன் என்றும், இயற்கை விளக்கம் செய்விக்கின்ற அருளைப் பற்றியும், கடவுளின் பூரண இயற்கை இன்பத்தைப் பற்றியும் மிக மிக அழுத்தமாகச் சொல்லி வருகின்றார்.

ஜீவகாருண்ய ஒழுக்கம் என்ற நூலில் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தான் உண்மைக் கடவுள் என்னும் உண்மையை எங்கும் சொல்லவில்லை.

இயற்கை உண்மைக் கடவுள் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தான் என்பதை ஜீவகாருண்ய ஒழுக்கம் என்ற நூலில் வெளிப்படுத்தாதது ஏன் என்ற கேள்வி எழுவது நியாயம் தானே.

ஜீவகாருண்ய ஒழுக்கம் என்ற நூவில் மூன்று பிரிவுகளாக எழுதியுள்ளார். அதிலே இறுதியாக இதன் தொடர்ச்சி கூடிய விரைவில் வெளிப்படுமாறு இறைவன் திருவருள் புரிவாராக என்று முடிக்கிறார்.

சமய மதங்களைப் பற்றியும் சமயக் கடவுள்களைப் பற்றியும், போற்றியும், பெருமைபடப் பாடியும், வணங்கியும், பின்பு சமய மதங்கள் எல்லாம் பொய் என்றும், அவற்றை நம்ப வேண்டாம் என்றும் சொல்லிவிட்டு அங்கும் உண்மைக் கடவுள் யார் என்பதைச் சொல்லவில்லை.

**வெம்மல இரவடி விடி தருணம்தனில்**
**செம்மையில் உதித்துளம் திகழ்ந்த செஞ்சுடரே (1530)**

1865 இல் சமரச வேத சங்கம் என்று ஆரம்பித்து அடுத்து ஷடாந்த சமரச சன்மார்க்கம் என்று ஆரம்பித்து, 1872ஆம் ஆண்டு நிரந்தரமான சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் என்று பெயர் மாற்றம் செய்கிறார்.

1867 ஆண்டு தருமச்சாலை தொடங்குகிறார். அன்று "ஜீவகாருண்ய ஒழுக்கம்" என்ற பெயரில் நான்கு ஒழுக்கங்களை வெளியிடுகின்றார்.

அதிலே இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் என்ற நான்கு ஒழுக்கங்களைப் பற்றியும் வெளியிடுகிறார்.

ஜீவகாருண்யமே உலகில் சிறந்தது என்று சொல்லிவிட்டு, ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்று சொல்லிவிட்டு, தனிமனித ஒழுக்கத்தைப் பற்றியும் சொல்லுகின்றார். அந்த நூலிலும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைப் பற்றி எந்த இடத்திலும் சுட்டிக் காட்டவில்லை.

இந்த செய்திகள் எல்லாம் 1870ம் ஆண்டுவரை வள்ளலார் வாழ்க்கையில் நடந்து வருகின்றன. அதற்கு மேல் தன்னுடைய நிலைகளை முழுவதுமாக மாற்றிக் கொள்கிறார்.

முதல் ஐந்து திருமுறைகளில் சொல்லியதை முழுவதுமாக மாற்றி ஆறாம் திருமுறையில் புதிய கொள்கைகளையும், புதிய கருத்துக்களையும், புதிய பரிமாற்றங்களையும், புதிய உண்மைக் கடவுள் யார் என்பதையும் வெளிப்படுத்தி, முழுவதுமாக மாற்றிக் கொள்கிறார்.

ஆறாம் திருமுறையின் பாடல்கள் விண்ணப்பங்கள், மெய்மொழி விளக்கம், பேருபதேசம் போன்ற உபதேசங்கள், அனைத்தும், கண்களை விழித்து நோக்கும் அளவிற்கு முக்கியமானவை. கற்பனைகள் அற்ற முற்போக்கு அறிவியல் சார்ந்த சிந்தனைகள் கொண்டவைகளாகும்.

ஆறாம் திருமுறையில் ஜீவகாருண்ய ஒழுக்கம் என்ற வார்த்தைகளைத் தேடிபிடிக்க வேண்டி உள்ளது. பரோபகாரம் சத்விசாரம் என்ற கொள்கைகளை மட்டுமே வலியுறுத்துகின்றார். அதற்கு மேல் ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமை வேண்டும் என்கிறார்.

பேருபதேசத்தில் மிகத் தெளிவான வார்த்தைகளைக் கையாளுகின்றார். இவைகளுக்கெல்லாம் சாட்சி நானேயிருக்கின்றேன். நான் முதலில் சைவ சமயத்தில் லட்சியம் வைத்துக் கொண்டிருந்தது இவ்வளவென்று அளவு சொல்ல முடியாது. அது பட்டணத்துச் சுவாமிகளுக்கும் வேலாயுத முதலியாருக்கும் இன்னும் சிலருக்குத் தெரியும். அந்த லட்சியம் இப்போது எப்படிப் போய்விட்டது. பார்த்தீர்களா! அப்படி லட்சியம் வைத்ததற்குச் சாட்சி வேறே வேண்டியதில்லை. நான் சொல்லியிருக்கிற - திருவருட்பாவில் அடங்கியிருக்கிற - தோத்திரங்களே போதும். அந்த தோத்திரங்களையும் மற்றவர்களுடைய தோத்திரங்களையும் சபைக்குக் கொண்டு வந்தால், அவைகளே சாட்சி சொல்லிவிடும். ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போதிருந்ததென்றால், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது.

இப்போது ஆண்டவர் என்னை ஏறாத நிலை மேலேற்றியிருக்கின்றார். இப்போது எல்லாவற்றையும் விட்டு விட்டதினால் வந்த லாபம் இது. ஆதலால், நீங்களும் விட்டுவிட்டீர்களானால், என்னைப்போல் பெரிய லாபத்தைப் பெறுவீர்கள். இதுவரைக்கும் விடாமல் வைத்துக் கொண்டிருந்தவர்கள் ஏதாவது லாபத்தைப் பெற்றுக் கொண்டார்களா? பெற்றுக் கொள்ளவில்லை. நான் அப்படி அந்தச் சமயத்தில் வைத்திருந்த லட்சியமே என்னை இந்த நிலையில் தூக்கி விட்டதென்றாலோ, அந்த லட்சியம் தூக்கிவிடவில்லை. என்னை இந்த இடத்துக்குத் தூக்கிவிட்டது யாதெனில், அக்காலத்திலேயே எனக்குத் தெரிவிக்க வேண்டியதைத் தெரிவித்தாரென்று வாசகப் பெரு விண்ணப்பத்திலும், எத்தேவரையும் நின் சாயையாய்ப் பார்த்ததேயன்றித் தலைவ! வேறெண்ணியதுண்டோ என, தேடியதுண்டு நினதுருவுண்மை என்னும் தொடக்கமுடைய பதிகத்திலும் விண்ணப்பித்திருக்கின்றேன்.

மேலும் அவர் தெரிவித்த உண்மைப் பெருநெறி ஒழுக்கம் யாதெனில், கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக என்றது

**திரையெலாம் தவிர்த்துச் செவ்விஉற்று ஆங்கே**
**வரையெலாம் விளங்க வயங்கு செஞ்சுடரே (1532)**

தான். என்னை ஏறாநிலை மிசையேற்றி விட்டது யாதெனில் தயவு! தயவு என்னுங் கருணைதான் என்னைத் தூக்கி விட்டது!

ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்று அழுத்தமாகச் சொல்லிய வள்ளலார், ஜீவகாருண்யத்தால் மட்டுமே அருளைப் பெறமுடியும், என்றவர் கடவுள் வழிப்பாட்டிற்காக சத்திய ஞானசபையை தோற்றுவித்ததின் மூலம் பழைய கொள்கைகளை அடியோடு மாற்றம் செய்கின்றார்!

மேலும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை தொடர்பு கொண்டால் மட்டுமே அருளைப் பெற முடியும் என்கிறார்.

"எல்லாம் செயல் கூடும் என் ஆணை அம்பலத்தே எல்லாம் வல்லான் தனையே ஏத்து" என்கிறார். ஆதியும் அந்தமும் இல்லா ஜோதி தன்னையே நினைமின்கள் சுகம் பெற விழைவீர் என்கிறார். அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தனிப்பெருங்கருணையாக உள்ளவர். எனவே எங்கே கருணை இயற்கையின் உள்ளன, அங்கே விளங்கிய அருட்பெருஞ் சிவமே என்கிறார்.

மேலும் அருளைப் பெறும் வழிகளைப் புதிய கோணத்தில் பேருபதேசத்தில் விளக்கம் தருகின்றார். ஜலத்திலிருக்கின்ற பாசியை நீக்குவதுபோல், நமது ஆன்மாவைத் தெரியவொட்டாமல் மூடியிருக்கின்ற பச்சைத் திரையாகிய ராகாதிகளை விசார அதியுஷ்ணத்தாலல்லது, மற்ற உஷ்ணங்களால் நீக்க முடியாது. அந்த உஷ்ணம் யோகியினுடைய அனுபவத்தில் தெரியும். அதை மனுஷ்ய தரத்தில் உண்டுபண்ணுவதற்குத் தெரியாது.

அந்த விசாரத்தைவிட ஆண்டவரை ஸ்தோத்திரம் செய்கின்றதிலும் தெய்வத்தை நினைக்கின்றதிலும் அதிக உஷ்ணம் உண்டாகும். யோகிகள் வனம், மலை, மழை, முதலியவற்றிற்குப் போய், நூறு ஆயிரம் முதலிய வருஷ காலம் தவஞ்செய்து, இவ் உஷ்ணத்தை உண்டு பண்ணிக் கொள்கிறார்கள்.

இப்படித் தவம் செய்து உஷ்ணத்தை உண்டு பண்ணிக் கொள்ளுகிறதைப் பார்க்கிலும், தெய்வத்தை ஸ்தோத்திரம் செய்கின்றதிலும் நினைக்கின்றதிலும் – இதைவிடக் – கோடிப்பங்கு, பத்து கோடிப் பங்கு அதிகமாக உஷ்ணம் உண்டு பண்ணிக் கொள்ளலாம். எவ்வாறெனில் ஒரு ஜாம நேரம், மனத்தில் இக விசாரமின்றிப் பர விசாரிப்புடன் ஆன்ம நெகிழ்ச்சியோடு தெய்வத்தைச் சிந்தித்துக் கொண்டாவது அல்லது ஸ்தோத்திரம் செய்து கொண்டாவதிருந்தால், நாம் பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்ளலாம் என்கிறார்.

இப்போது நாம் சிந்திக்க வேண்டும். பக்தியால் பெற முடியாததை, ஜீவகாருண்யத்தால் பெற முடியாததை எல்லாம், உண்மைக் கடவுளான அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை ஸ்தோத்திரம் செய்கின்றதாலும், நினைக்கின்றதாலும் கோடி கோடி பங்கு உஷ்ணம் உண்டு பண்ணி அருளைப் பெறலாம் என்கிறார்.

மேலும் மனதில் இவ் விசாரம் இன்றிப் பரவிசாரணையுடன் ஆன்ம நெகிழ்ச்சியோடு தெய்வத்தை இடைவிடாது தொடர்பு கொள்ள வேண்டும் என்கிறார். இறுதியாக ஞானசரியை 28 பாடல்களைச் சுட்டிக்காட்டி, அதில் சொல்லிய வண்ணம் வாழ்க்கை அமைத்துக் கொண்டால் மரணத்தை வென்றுவிடலாம் என்கிறார்.

ஞானசரியை முதல் பாடலே அருளைப்பெற அச்சாணி போன்ற பாடலாகும். பாடல்!

நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே
நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண்ணீரதனால் உடம்பு
நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்துவனைந் தேத்துதும்நாம் வம்மின்உல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே!

புனைந்து உரைக்கவில்லை. பொய் புகலவில்லை. சத்தியம் சொல்கிறேன். உண்மை உரைக்கின்றேன் என்று ஆறாம் திருமுறை அருட்பாவை நிறைவு செய்கின்றார்.

நாம் எதைத் தேடிச் செல்கிறோமோ அவை கண்டிப்பாகக் கிடைக்கும்! நாம் அடைய வேண்டியது மரணம் இல்லாப் பெருவாழ்வு!

**வெற்றி பெறுபவர்களே பாக்கியவான்கள்!**



அன்புடன் ஆன்மநேயன்
**ஈரோடு கதிர்வேல்**
+91 9865939896

**அலகிலாத் தலைவர்கள் அரசு செய் தத்துவ**
**உலகெலாம் விளங்க ஓங்கு செஞ்சுடரே (1534)**

**கொட்டும் மழையில் நித்ய தருமச்சாலையில் அன்னம் வழங்குதல்**



**மெய்யூர் தருமச்சாலையில் அன்னம் வழங்குதல்**



**பெரியக்குறிச்சி தருமச்சாலையில் அன்னம் வழங்குதல்**



**முன்னுறு மலஇருள் முழுவதும் நீக்கியே**
**என்னுள வரைமேல் எழுந்த செஞ்சுடரே (1536)**

## சாலையோரங்களில் ஆதரவற்றவர்களை தேடிச்சென்று உணவு வழங்குதல்














தீபம் அறக்கட்டளையின் சார்பில் சாலையோரங்களில் உள்ள ஆதரவற்றோர், ஊனமுற்றோர், முதியவர்களுக்கு தேடிச்சென்று சாப்பாடு பொட்டலங்கள் மற்றும் தண்ணீர் பாட்டில் வழங்கப்படுகிறது.

**ஆதியும் நடுவுடன் அந்தமும் கடந்த**
**ஜோதியாய் என்னுளம் சூழ்ந்த மெய்ச்சுடரே (1538)**

# அருட்பெருஞ்சோதி அகவல்

அனுபவப் பொருள் விளக்கம்

திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா

## 46. எண்ணிய அனைத்தும் தரும் சபை

91. எனைத்துந் துன்பிலா இயலளித் தெண்ணிய
92. அனைத்துந் தருஞ்சபை அருட்பெருஞ் ஜோதி

(உ-வி.) மனிதன் என்றும் அடைய விரும்புவது இன்பமே. துன்பத்தை எக்காலத்தும் எவரும் விரும்புவதில்லை. எனினும் மனிதனுக்கு அவன் விரும்பும் இன்பம் எல்லாம் கிடைக்கின்றதுமில்லை. நிறையருள்பெறாத மனிதன் எவ்விதத்தும் தன் மதியைக் கொண்டு நிறை இன்ப ஆக்கமும், முழுமையான துன்ப நீக்கமும் பெற்றுவிடமுடியாது. இதற்கு முடிவான ஒரே சான்று, மனிதன் இதுகாறும் துன்பியல் மரணத்தை அடியோடு விலக்கிவிட்டு, அழிவற்ற பேரின்ப வாழ்வு பெறாததேயாம். இத்தருணம்தான், மனிதன் நிறை பேரருளால் அப்படித் துன்பத்தின் நிழல்கூடச் சாராத நிலையான நிறை இன்ப வாழ்வு பெறுகின்றான் சுத்த சன்மார்க்கச் சேர்ப்பால்.

எனைத்தும் என்றால், எவ்வளவும், அதாவது, மிகச் சிறிய அளவும், இம்மியளவுமாம். ஆதலின் எனைத்தும் துன்பிலா இயல் என்பது, சிறிதளவும் துன்பமேயில்லாத தன்மையாம் அது நிறையின்ப நிலையே. இவ்வின்ப நிலையை நம் விழைவின்படி நமக்கு அருள்வது நமது அருட்பெருஞ்ஜோதி ஆனந்த சபையே என்று ஈண்டு வலியுறுத்தப்பெறுகின்றது.

உலகில் மெய்யான நிறை இன்ப வாழ்வு பெறுதற்கு, ஜீவதயாநெறி அடைந்து சத் விசாரத்தால், சத்துப்பொருளாகிய அருட்பெருஞ்ஜோதி சபையைச் சார்ந்து நின்று வாழவேண்டியிருக்கின்றது. இவ்வம்பல வாழ்வு சேராமல் தயவில்லாத் தவ முயற்சி எதனாலும், பிற எவ்வகை மார்க்கத்தாலும் துன்பங் கலவாத இன்ப வாழ்வு பெறமுடியாதாம்.

கடவுள் இயல் இரு தன்மையாயுள்ளது. ஒன்று அகமாய், அழிவற்ற இன்பநிறைவாய் இருக்கிறது. மற்றது புறத்ததாய், தோற்றக் கேடும், சிற்றின்பத் துன்பமும் கொண்டதாய் இருக்கின்றது. மனிதன் அகநிலை பெறாது புறவாழ்வில் உழன்று கொண்டிருக்கும்வரை, உலகியல் இன்ப துன்பத்தைத் தவிர்த்துக் கொள்ளவும், மெய்யின்பத்தை அறிந்து அடையவும் இயலாது. இவன் உண்மைத் தயவின்மையால், சூழுயிர்க்கு இன்பு செய்யாது இருந்து, தானும் மெய்யின்ப நிலை அடையாது போகின்றான். விருப்பு வெறுப்பற்று பற்றறநின்று, நிஷ்காமியகர்மமாகத் தயவில்லாச் செயல்புரிகின்றவனும் அக இன்ப நிறைவாழ்வு பெறமாட்டான். ஆகவேதான், ஒருவன் தயவுச்செயல் புரிந்து அகமிருந்து எவர்க்கும் இன்பமளித்தல் முறையாகும். சூழ்நர்க்கு உயிர் விளக்கத் தயவு செய்வதே இவன் கடமை. மற்றபடி உயிர் விளக்கத்தைப் போக்கும் தண்டனை அல்லது கொலைச் செயலை எவ்விதத்தும் புரியக்கூடாது. அழிக்கும் செயல் கடவுளரின் மறக் கருணை நியதிக்கே விட்டுவிடவேண்டும். அவர் தயவாலே அழிப்பார். ஆக்குவார். பக்குவப்படுத்தி வாழ்விப்பார். பிற எல்லா உயிர்களும் அருள் நியதிக்கு ஒப்ப வாழ்ந்து வர மக்களினமே நியதி முறைக்கு மேற்சென்று, புறநிலை கடந்து அகமிருந்து இன்பியல் விளைவிக்க வேண்டியவர்களாவர். ஆகையால், சுத்த தயவினால் ஒருவன் அனகவாழ்வு ஏற்று, இன்பமே நிறைந்த சுத்த சுகானந்தத்தில் என்றும் விளங்குவான்.

உள்ளொளி ஓங்கிட உயிரொளி விளங்கிட
வெள்ளொளிகாட்டிய மெய்யருட்கனலே (1540)

### சென்னை வேளச்சேரி

# நித்ய தீப தருமச்சாலை விரிவாக்கத் திருப்பணி

**தர்மம் செய்வோம் ! தயவுடன் வாழ்வோம் !!**

தீபம் அறக்கட்டளையின் ஆணிவேராக இருந்து கொண்டு, தன்னை வெளிகாட்டிக்கொள்ளாமல் அன்னதானப் பணிகள் உட்பட அனைத்து அறப்பணிகளுக்கும் நன்கொடைகளை வாரி வழங்கி கொண்டிருக்கும் நன்கொடையாளர்களை, மனித வடிவ தெய்வங்களை இரு கரம் கூப்பி வணங்கி மகிழ்கிறோம். தங்களது தொடர் பேராதரவினால், வேளச்சேரி நித்யதீப தருமசாலையில் மக்களின் பசிபிணி போக்கும் பணி மட்டுமல்லாது, மாநிலம் முழுவதும் பல்வேறு தர்ம சாலைகள் ஆரம்பித்து தினசரி பல்லாயிரக்கணக்கான மக்களின் பசிப்பிணி போக்கி வருகிறது. தீபத்தின் சமுதாயப்பணிகள் தொடர்ந்து விரிவாக்கம் செய்யப்பட்டுவருகிறது.

சென்னை, வேளச்சேரி நித்ய தீப தருமசாலை சொந்த இடத்தில் அமையவும், சமுதாயப்பணிகள் சீரும்சிறப்புமாக நடைபெறவும், மிகப்பெரிய மனதுடன் சமுதாய அக்கறையுடன் பெருந்தொகைகளை நன்கொடைகளாக வாரிவழங்கிய நல்இதயங்களை தீபம் அறக்கட்டளை நன்றியுடன் வணங்கி, வாழ்த்தி மகிழ்கிறது. தருமச்சாலையில் நன்கொடையாளர்களின் பெயர்கள் பொன்எழுத்துகளால் பொறிக்கப்படவுள்ளது.

பசிபிணியாளர்கள் உட்கார்ந்து சாப்பிட ஏதுவாக பெரிய அன்னதர்மகூடம் அமைக்கவும், ஞானசபை ஏற்படுத்தவும் திருவுள்ளம் கூடியுள்ளது. நித்ய தீப தர்மசாலையில் விரிவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, வருகிற தைப்பூச திருநாளுக்கு (28-01-2021) முன்னர் முடிவுக்கு வரும்படி வேலைகளை துரிதப்படுத்த உள்ளோம். அன்ன தருமச்சாலை விரிவாக்க திட்ட மதிப்பீடு ரூ. 20 லட்சம் இந்த புனிதமான திருத்தொண்டில், தாங்களும் பொருளாகவோ, நிதியாகவோ, உடல் உழைப்பாகவோ கொடுத்து அருள்மழையில் பாகம் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டி, விரும்பி கேட்டுக்கொள்கிறோம்.

**எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !**

இப்படிக்கு :

**நிர்வாகக்குழு தீபம் அறக்கட்டளை**

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

Donations may be sent by crossed cheque to:

**DEEPAM TRUST**

#30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

**For Bank Transfer**

| | | |
|---|---|---|
| Bank / Branch | : | State Bank of India / IIT Branch |
| Current A/c. No. | : | 30265475129 |
| IFSC | : | SBIN0001055 |

**வங்கி பரிமாற்ற தகவலை 9444073635 என்ற எண்ணிற்கு அவசியம் தெரிவிக்கவும்.**

**நலங்கொளப் புரிந்திடு ஞானயா கத்திடை**
**வலஞ்சுழித்து எழுந்து வளர்ந்த மெய்க்கனலே (1542)**
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

**சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில்
தீப ஒளித் திருநாளை முன்னிட்டு மெய்யூர் கிராம காப்பு காடுகளில் வாழும்
பழங்குடியின குடும்பங்களுக்கு அவர்களின்
குடிசைகளுக்கே சென்று இனிப்புகள் வழங்குதல்.**













**வேதமும் ஆகமவிரிவும் பரம்பர
நாதமும் கடந்த ஞானமெய்க் கனலே (1544)**

# குழப்பந்தான்? குதர்க்கமல்ல!!!

**"குழப்பத்திற்கு குழப்பம் வினைப்பர்
குழப்பத்தால் குழப்பம் உருதார்"**

உங்களை குழப்புவதற்கு அல்ல இந்தக்கட்டுரை தெளிவைத் தேடிடும் சிந்தனை தான் இம்முயற்சி. குதர்க்கவாதம் என்று அவசரத்தீர்ப்பு வழங்கி விடாதீர்கள்.

மனிதனை அடுத்த நிலைக்கு நகர விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிற மடமைகளைக் கொளித்திட வேண்டும் என்ற செய்தி எங்கெங்கும் ஒலித்திட வேணும் என விரும்புகிறேன்.

புனையப்பட்ட புகழ், வருவிக்கப்படும் கூட்டம், வாங்கப்பட்ட வாக்குகள், வணிக வளாகங்களாகப்பட்டு விட்ட வழிபாட்டுத்தலங்கள், பகை உணர்வை பெருக்குகின்ற மிகைப்பற்றாளர்கள் (தீவிரவாதிகள்) இலவசத்திற்கு ஏங்கும் மலிவான மனப்பாங்கு, இவைகளின்று விடுபட்டு இனியாவது, தூய்மை நிறை நெஞ்சினராக, ஏழ்மையை முற்றிலும் அகற்றி, எளிய வாழ்க்கை நோயற்ற வாழ்க்கை, நேயமிகு சுற்றத்துடன், **போர்க்குணம்** மறைந்துவிட்ட உலக சமுதாயம் உருவாகிட என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்தபோதுதான் குழப்பங்கள் சூழ்ந்தன. எனது குழப்பங்கட்கு தீர்வு கண்டிடத்தான் உங்களிடம் முறையிட்டுக் கொண்டிருக்கிறேன்.

எனது குழப்பங்களை இரு பெரு வகையாக உணர்கிறேன்.

வலிமையான உறுத்தலோடு மனிதனைத் தொடர்கின்ற குழப்பங்கள்.

மெலிதான சலனத்தோடு மறைந்து கொண்டிருக்கின்ற குழப்பங்கள்.

முதல் வகையான, வலிமைமிக்க உறுத்தல்கள்:-

புராண - இதிகாச அதி நம்பிக்கைகள், மதங்கள், பால்மிகைப்பற்று - புனிதயாத்திரை - புனிதப்போர்கள் காரணம் தெரியாமலே கடைப்பிடிக்கபடும் சடங்குகள், ஜோதிடத்தில் நம்பிக்கை.

இரண்டாவது வகை மெலிதான சலனம் - மறையத் துவங்கிவிட்டது: பெண்ணடிமை - சாதியப்பற்று, கொத்தடிமை கொடுமைகள் - நீதி தேவன் மயக்க இந்த இருவகை குழப்பங்கள் பற்றியும் வெவ்வேறு தலைப்புகளில் நிறைய எழுதிவிட்டேன். குழப்பம் தீர்ந்தபடில்லை. ஆகவேதான் உங்களிடம் "கோ" எனக்கதறுகிறேன். **வள்ளலார் பாடினார்.**

கணமேனும் சகிக்க இயலாமல் மருகினார், உருகினார்,
மனிதனின் இதயம் கனியவில்லையே? கருணை
பெருகவில்லையே?
காருண்யவான்கள் நிறைய வில்லையே? புலம்பியது
போதும்!

**நீதிதேவன் மயக்கம்** பற்றி அண்மையில் "இந்து" பத்திரிக்கையில் வந்த ஒரு புள்ளிவிவரத்தால் அறிந்தேன். உங்களோடு பகிர்ந்து கொண்டால் எனது குழப்பம் குறையும்.

**தேங்கிநிற்கும் வழக்குகள் : மூன்று கோடி அவற்றில் 2.6 கோடி வழக்குகள் 2010 க்கு பிறகு தாக்கல் செய்யப்பட்டவை.**

ஒன்பது மாநிலங்களில், பத்துலட்சம் வழக்குகள் தேக்கம்.

எனது குழப்பம் இத்தனை வழக்குகள் ஏன்? நீதிமன்றங்களை நாடித்தான் ஆக வேண்டும் என்ற கட்டாயம் ஒரு மனிதனுக்கு ஏற்படுகிற தென்றால். அங்கே அன்பு இல்லை, கருணை இல்லை, தயவு இல்லை இவைகளை இருக்க வேண்டி இடத்தில் பேராசை, பொறாமை, கோபம் இவை மூன்றும் இறுக்கப்பிடித்துள்ளன.

அநாகரிகத்தின் இன்னொரு பரிமாணம் என்ன தெரியுமா? **"கட்டபஞ்சாயத்து" Justice** தீர்ப்பு.

ஊர் பஞ்சாயத்திலிருந்து, உச்ச நீதிமன்றம் வரை போக வேண்டியதில்லை. வழக்கில் உள்ள நியாய, அநியாயங்களையெல்லாம் ஆய்வு செய்ய மாட்டார்கள். உங்கள் தேவை எத்தனை திரைப்படங்களில், இத்தகைய காட்சிகள் விவரமாக காண்பிக்கப்படுகின்றன? நல்ல சமுதாயத்தில் தான் நாம் இருக்கிறோமா?

"ரூமி" என்பவர் உலக மகா கவிஞர்களில் ஒருவர், துருக்கி நாட்டில் வாழ்ந்தவர். அவர் கவிதை ஒன்று:-

**"நற்செயல்களுக்கும், தீய செயல்களுக்கும்,
நியாயத்திற்கும், அநியாயத்திற்கும்
அப்பாற்பட்ட ஓர் இடம் உள்ளதே அறிவீரா?
அந்த இடம் நோக்கி விரைவோர் வாரீர்! வாரீர்!!"**

என உலகோரை விளித்தார். மறைந்தார்.

இது போன்ற வாசகங்களைப் படிக்கவோ, புரிந்து கொள்ளவோ விரும்பாத, இவையெல்லாம் தேவையற்றவை என அலட்சியப்படுத்தும் ஒரு சமுதாயத்தில் தான் நாம் வாழ்கின்றோம்.

இத்தகைய மனப்பாங்கினை, நமது முன்னோர் சந்திக்கவில்லையே?

சந்தித்தனர் - தளர்ச்சியுள்ளனரா? இல்லை மாறாக, நல்வழிப்படுத்திட பெரு முயற்சி மேற்கொண்டார். அரிய படைப்புகள் உருவாகிட காரணங்கள், மனிதனை உன்னத இலக்கு நோக்கி அழைத்துச்செல்லத்தானே!

மனிதன் இன்னும் முரண்டு பிடிக்கும் முரட்டுக் காளையாகவே இருக்கிறான். அடங்கிடுவான். முயற்சியில் தளர்ச்சி வேண்டாம்.

அடக்கமே உருவான மனிதன் காணப்போகும் சமுதாயத்தில், ஒரே ஒரு மனிதன் கூட "அனாதை ஆக்கப்பட்டு விட்டேனே" என அரற்றிடும் அவல நிலை ஏற்படாது.

**போர்** - கடந்து போன கொடுமையாக, விரும்பத்தகாத வன் செயலாக, மறக்கப்பட வேண்டிய துர்க்குணமாக, ஒதுக்கித் தள்ளிடும் உயர்ந்தோர் நிறைந்த சமுதாயத்தில், கடைசி மூச்சுவரை மனிதன் உபயோகப்படுகிறவனாயினும் அவன் **பயன் ஈனும் பண்புடைய** வனாகவே, வாழவேண்டும்.

கற்பகத்தருக்கள் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்கள். எத்தனை தாவரங்கள், தங்களை முழுமையாக மனிதனுக்கு அர்ப்பணித்து விடுகின்றன! மரங்கள் செய்து கொண்டிருக்கும் நற்பணிகளை மனிதன் செய்யக் கூடாதா? மனிதா, உன்னையும் முழுமையாக அறியவில்லை - சுற்றுப்புறத்தையும் பார்ப்பதில்லை.

**எண்ணிய எண்ணிய எல்லாம்தர எனுள்
நண்ணிய புண்ணிய ஞானமெய்க் கனலே (1546)**

கதை ஒன்று சொல்கிறேன். கேட்கிறீர்களா?

ஓர் ஆற்றோரம், ஒரு படகோட்டி தம்பதி எளியதோர் குடிசை தங்களுடைய ஒரே மகனோடு வாழ்ந்துவந்தனர். அந்த ஆண் குழந்தை சிறுவனானவன், அவனோடு விளையாட யாருமில்லை அருகேயுள்ள கிராமத்து பிள்ளைகளோ, இவனை சேர்த்துக் கொள்ள மாட்டார்கள்.

செய்வதறியாது நின்ற சிறுவனின் பார்வை சற்று தூரத்தில் இருந்த ஒரு செடியின் மீது விழுந்தது. செடி தன்னை அழைப்பதாக உணர்ந்தான். அருகே சென்றான். ஆற்றிலிருந்து நீர் கொண்டு வந்து செடிக்கு கொஞ்சம், கொஞ்சமாக ஊற்றினான்.

இலைகள் சிலிர்த்தன, செடி சந்தோஷமாக, சிரிப்பதாக உணர்ந்தான். அன்றிலிருந்து, செடியை பராமரித்தான். செடி மரமாயிற்று. சிறுவனும் இளைஞனானான். பெற்றோரை ஒருவர் பின் ஒருவராக இழந்தான் மரத்திடம் சொல்லி அழுதான். மரம் இளைஞரைத் தேற்றி தைரிய மூட்டியது. அழுதுகொண்டே மரத்தை நாடி வருபவன், தைரிய மாகத்திரும்பி செல்வான்.

இளைஞன் திருமணம் செய்து கொண்டான். அதே குடிசை, அதே படகு, படகோட்டி ஜீவனம்.

ஊரில் திருவிழா கையில் பணமில்லை மனைவியோடு திருவிழா காண ஆசை. என்ன செய்வான்? மரத்தருகே சோர்வாக வந்து நின்றான்.

மரம் பேசிற்று. "சோர்வு" ஏன்? என் மீது கனிகள் குலுங்குகின்றனவே பறித்து சந்தையில் விற்று பணமாக்கிக் கொள். மனைவியோடு "திருவிழா கொண்டாடு" என்றது கனி. வியாபாரம் தொடர்ந்து பல ஆண்டுகள் உருண்டன.

பழைய குடிசை ஒருநாள் அடித்த பலத்த காற்றில் குடிசையின் மேற்கூரை விழுந்து விட்டது. ஏழ்மையைத்தாங்க இயலாத மனைவி, தாய் வீட்டுக்குச் சென்று விட்டாள்.

தனியன் ஆனான் இளைஞன், தேம்பி அழுதான் மரத்தருகே. மரம் பேசியது "எனது கிளைகள்மிக உறுதியானவை வெட்டி எடுத்து சென்று மேற்கூரையை பலப்படுத்திக்கொள்" என்றது.

மரத்தின் கிளைகளை வெட்டிக் கொண்டான், குடிசையை சீரமைத்தான், நடுத்தர வயதினன் முதியவனானான்.

மரம் இப்போது கிளைகளின்றி, அடிமரத்தோடு அம்மணமாக நிற்கிறது.

முதியவன், தளர்ந்த நடையும், வாடியமுகமும் ஆக வந்து நின்றான். எனது படகு உடைந்து விட்டது. ஜீவனத்திற்கே வழியில்லை இதை சொல்லும்போது அவன் குரலும் உடைந்துவிட்டது புலம்பினான்.

**மரம் சொல்கிறது :** "எனது அடிமரம் மிக உறுதியானது. இதை அப்படியே அறுத்து எடுத்துச்செல், படகை புதுப்பித்து தொழிலைத்துவங்கு"

அப்படியே செய்தான் சில மாதங்கள் கழிந்தன. ஒருநாள், அந்த படகுக்கார கிழவன், (நாம் சிறுவனாக பார்த்தோமே அவன் தான்) தள்ளாடிய வாறு, மரத்தருகே வந்தான்.

"ஆயாசமாக இருக்கிறதே" என்று ஈனக்குரலில் சொல்ல முயன்றான், சொற்கள் குளறின.

மரம் சொன்னது :- "மகனே எனது வேர் பரந்து கிடக்கிறது. அதன் மீது தலை வைத்து உறங்கு ஆயாசம் தீரும்"

அப்படியே படுத்தான். மீளாத்துயிலில் ஆழ்ந்தான் அடுத்தநாள், படகுக்காரக்கிழவன் இறந்து விட்டான் என் பேசிக் கொண்டனர் கிராமத்து மக்கள்.

ஒருவன் சொன்னான் அங்கே ஒரு அதிசயம் பார்த்தேன். அந்த வேரில் முத்து முத்தாக வியர்வை போல நீர்த்துளிகள் இருந்தன ஒருவேளை மரம் அந்த நண்பனுக்காக கண்ணீர் விட்டதோ?

கதை முடிந்தது என்ன தெரிந்து கொண்டோம்.

இறுதி வரை "பயன் ஈனும் பண்பு பெற்றிடவேணும்" எனும் உறுதி பிறந்ததா?

அருள்பணிகள் ஆற்றி, அடுத்தநிலையை நோக்கி பயணித்திட வேண்டிய மனிதன், **அன்பால் உலகையே** ஆண்டு கொண்டிருக்க வேண்டிய மனிதன், நறும் புனலாடி, நல்லமிர்தம் சுவைத்துக் கொண்டிருக்க வேண்டிய மனிதன், விசயங்களை அடையாளம் காண முனையாமல், வீண் பொழுது போக்குகிறான். பலனளிக்காதவை எனப் புரிந்துகொள்ளாமல் பழைய சடங்குகளை பக்தியோடு பின் பற்றிக்கொண்டு, பெருமிதம் பேசுகிறான்.

எனது குழப்பத்தை ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே, தீர்க்க முயன்றுள்ளனர். ஆனாலும் குழப்பங்கள் தொடர்கின்றன.

பழைமைகளை போற்றுவது முதல் நிலை தக்கமாற்றங்களை தயங்காமல் செய்வது அடுத்தநிலை. குழம்பிவிட்டதை அடிநிலை தெறிந்தார் சொற்கேட்டு தெளிவோடு பயணிப்பதுதான் நன்னிலை.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே பாரதியார் சொன்னது.

"செத்தபிறகு சிவலோகம், வைகுந்தம்
சேர்ந்திடலா மென்றே எண்ணியிருப்பார்
பித்த மனிதர் அவர் சொல்லும் சாத்திரம்
பேயுரையாம் என்றிங்கே ஊதேடா சங்கு"


"சாத்திரங்கள் பலதேடினேன் – அங்கு
சங்கையிலாதென சங்கையாம் – பழங்
கோத்திரங்கள் சொல்லு மூடர்தம் பொய்மைக்
கூடையில் உண்மை கிடைக்குமோ?"

– மகாகவி பாரதியார்

எய்வகை சார் மதங்களிலே பொய் வகை சாத்திரங்கள்
எடுத்துரைத்தே எமது தெய்வம் எமது தெய்வம் என்று
கைவகையே கதறுகின்றீர் தெய்வ மொன்றென்று அறியீர்
கரிபிடித்து கலகமிட்டப் பெரியரினும் பெரியீர்

– வள்ளலார்

**குழப்பம் தீர்ந்ததா?**
**குதர்க்கம் அல்லவே?**



**இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை
08056438488

**வலமுறு சுத்தசன் மார்க்க நிலைபெறு**
**நலமெலாம் அளித்த ஞானமெய்க் கனலே (1548)**

# சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் மதுராந்தகம் அருகில் உள்ள 5 கிராமங்களில் குடிசைவாழ் குடும்பங்களுக்கு தீப ஒளித் திருநாளை முன்னிட்டு நேரில் சென்று இனிப்பு வழங்குதல்













இரவொடு பகலிலா இயல்பொது நடமிடு
பரம வேதாந்தப் பரம்பரம் சுடரே (1550)

# சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் 11 - ஆம் ஆண்டாக தீப ஒளித் திருநாளை முன்னிட்டு ஆதரவற்ற குழந்தைகள் & முதியோர் காப்பகங்களுக்கு இனிப்பு வழங்குதல்


















**வரநிறை பொதுவிடை வளர்திரு நடம்புரி**
**பரம சித்தாந்தப் பதிபரஞ் சுடரே (1552)**

# மனித பிறப்பின் இரகசியம் (தொடர்ச்சி...)

**கோசங்கள் 5 (உடம்பு)**

1. அன்னமய கோசம்
2. விஞ்ஞானமய கோசம்
3. மனோமணிய கோசம்
4. பிராணயமய கோசம்

நிற்க பக்குவத்தின் அடிப்படையின் இந்த உடம்பு அமைகிறது.

**தேவ, நரக, பைசாசங்கள் கண்ம பேதத்தால்**

↳ அபக்குவமாயை

↳ அபக்குவ கன்மம்

↳ அபக்குவ ஆணவம்

**ஜீவர்கள்**

↳ பக்குவ மாயை

↳ அபக்குவ கன்மம்

**தாவர உயிர்கள்**

↳ அபக்குவ கன்மம்

↳ அபக்குவ கன்ம ஆணவம்

↳ அபக்குவ கன்ம மாயை

பெறுவதற்கரிய பிறவியை பெற்றும்
பெறுவதற்கரிய பிரான் அடிபேணார்
பெறுதற்கரிய பிராணிகளெல்லாம்
பெறுதற்கரியதோர் பேரு இழைந்தாரே

-திருமந்திரம்

**ஆன்மாவும் அதன் குடும்பங்களும்**

குடும்பதலைவன் (ஆன்மா) ஏழை

(1) முதல் மனைவி - (ஆணவம்)

↳ பிள்ளை ⇨ அஞ்ஞானம்

(2) இரண்டாம் மனைவி - (மாயை) (6 கோடி சக்தி)
பிள்ளைகள் - 4
1) மனம்
2) புத்தி
3) சித்தம்
4) அகங்காரம்

(3) மூன்றாம் மனைவி - கன்மம்
பிள்ளைகள் - 3
1) இராஜசம்
2) தாமஸம்
3) சாத்வீகம்

(4) வப்பாட்டி (பிரத்தை)
பிள்ளைகள் - உறக்கம்
இந்த குடும்ப தலைவன் இருப்பது வாடகைவீடு என்ற உடம்பு

இதன் உரிமையாளர்கள்
1) வாதம்
2) பித்தம்
3) சிலேத்துமம்
வாடகை = உணவு

**இந்த மனித உடம்பு 96 தத்துவத்தில் அடங்கியுள்ளது**

96 தத்துவம் (உடம்பு - 60, சூட்சமம் - 36=96)

(1) பிருதிவியின் காரியம் (மண்)
1) மயிர்
2) தோல்
3) எலும்பு
4) நரம்பு
5) தசை

(2) அப்புவின் காரியம் (நீர்)
1) நீர்
2) உதிரம்
3) மூளை
4) உமிழ் நீர்
5) சுக்கிலம்

(3) தேயுவின் காரியம் (நெருப்பு)
1) ஆகாரம்
2) நித்திரை
3) பயம்
4) மைதுனம்
5) சோம்பல்

(4) வாயுவின் காரியம்
1) ஓடல்
2) இருத்தல்
3) நடத்தல்
4) கிடத்தல்
5) தத்தல்

(5) ஆகாயத்தின் காரியம்
1) குரோதம்
2) லோபம்
3) மோகம்
4) மதம்
5) மாச்சிரியம்

(6) வாக்கு
1) சுக்குமை
2) பைசாந்தி
3) மத்திமை
4) வைகரி

(7) ஏடணை
1) மண்ணாசை
2) பெண்ணாசை

3) பொன்னாசை

(8) குணம்

1) சாத்வீதம்
2) இராசதம்
3) தாமதம்

(9) அவத்தை

1) சாக்கிரம்
2) சொப்பனம்
3) சுழுத்தி
4) துரியம்
5) துரியாதீதம்

(10) வாயு

1) பிராணன்
2) அபாணன்
3) வியானன்
4) உதானன்
5) சமானன்
6) நாதன்
7) கூர்மன்
8) கிருதான்
9) தேவதத்தன்
10) தனஞ்சயன்

(11) நாடி

1) இடை
2) பிங்கலை
3) சுழுமுனை
4) காந்தாரி
5) அத்தி
6) சிங்குவை
7) அலம்படை
8) புருடன்
9) சங்கினி
10) குரு

சூட்சமதத்துவம் - 36

(12) ஆன்ம தத்துவம்

1) மண்
2) நீர்
3) தீ
4) காற்று
5) ஆகாயம்

(1–5: 5 பூதம் (தூலம்))

6) நாற்றம்
7) சுவை
8) ஒளி
9) ஊறு
10) ஓசை

(6–10: 4 தன்மாத்திரைகள் பஞ்சபூதங்கள் கக்கும் நிலை)

(1–10: பிரக்ருதி மாயா தத்துவம்)

11) காது
12) தோல்
13) கண்
14) நாக்கு
15) மூக்கு

(11–15: 5 ஞானேந்திரங்கள் (அறிகருவிகள்))

16) வாய்
17) கால்
18) கை
19) எருவாய்
20) கருவாய்

(16–20: 5 கன்மேந்திரங்கள் (தொழிற்கருவிகள்))

21) மனம்
22) புத்தி
23) சித்தம்
24) அகங்காரம்

(21–24: 4 அந்தகரணங்கள்)

(11–24: பிரக்ருதி மாயா தத்துவம்)

25) காலம்
26) நியதி
27) கலை
28) வித்தை
29) அராகம்
30) புருடன்
31) மாயை

(25–31: 7 அசுத்தமாயா தத்துவங்கள் → வித்தியா தத்துவம்)

32) சிவம்
33) சத்தி
34) சாதாக்கியம்
35) ஈசுவரம்
36) சுத்தவித்தை

(32–36: 5 சுத்தமாயா தத்துவம் → சிவதத்துவம்)

**மனித பிறவி அரிது**

அரிது அரிது மானிடராய் பிறப்பது அரிது
அதனிலும் அரிது கூன் குருடு செவிடு பேடு
நீக்கி பிறத்தல் அரிது
அதனிலும் அரிது ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த வேளையில்
தானமும் தவமும் தான் சிறத்தல் ஆயினும்
வானவர் உலகம் வழி திறந்திடுமே

- ஔவையார்

**ஜீவன்**

1. சாமானிய ஜீவன் = இது இறக்காது
2. விசேஷ ஜீவன் = இறக்கும்

இது கண்டத்தில் இருக்கும்

குறிப்பு : தேகத்தில் ஆன்மா தனித்திருக்கும் ஜீவன் என்ற உயிர் = மன முதலிய அந்தகரண கூட்டத்தில் மத்தியிலிருக்கும்



ஆன்மநேயன் **பொதிகைப்பிரியன்**
கள்ளக்குறிச்சி
கைப்பேசி : 97897 88198

**சபைஎன துளமெனத் தானமர்ந்து எனக்கே
அபயம் அளித்ததோர் அருட்பெருஞ்ஜோதி (1556)**




## தீபாவளி இனிப்பு தயாரிப்பில் தீபம் சேவதாரிகள்




## தீபாவளி முன்னிட்டு 5000 லட்டுகள் மற்றும் 100 கிலோ காரம் தயாரித்த 18 சேவதாரிகள்

RNI : TNTAM / 2010 / 35284

Posted at Patrika Channel, Egmore, Chennai - 600 008. | Date of Publication : 20th of Every Month.
**Published by :** M. Balakrishnan on behalf of Deepam Trust, #30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042 and **Printed by :** RK. Shekaar at Sree Offset Printer, No. 840, Anna Salai, Saidapet, Chennai - 600 015. **Editor : M. Balakrishnan**





நாகை மாவட்டம், தலையாமழை கிராமத்தை சேர்ந்த ஏழைக் கூலி தொழிலாளி திரு. த. முருகசெல்வம் ஓலை குடிசை அமைக்க, 4 பெண் குழந்தைகளின் தீபாவளி புத்தாடைகளுக்கு, ஒரு மாத உணவு பொருட்களுக்கு ரூ.15,000/- நிதி வழங்கிய காட்சி...



சித்தூர் மாவட்டம், நகரி மண்டலம், ஏகாம்பர குப்பம் கிராமத்தில் புதியதாக ஆரம்பிக்கப்பட்ட தருமச்சாலைக்கு நிதி வழங்கும் காட்சி...

If undelivered Please Return to:

**DEEPAM TRUST**
(REDG. No. - 2035/07)
#30, Drowapathi Amman Koil Street,
(Next to Mosque), Velachery, Chennai - 600 042.
Phone : 044 - 2244 2515 | Cell : +91 94440 73635
E-mail : admin@deepamtrust.org
Web : www.deepamtrust.org

To
Shri. / Smt. / Dr.

Posted at Patrika Channel
Posted on 27-11-2020
Egmore, Chennai - 8